செய்தி வெளியீடு எண்: 34 நாள்: 19.04.2018

**தேனி மாவட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தேனி-அல்லிநகரம் நகராட்சியில் பல்வேறு இடங்களில்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் :-**

*********

தேனி மாவட்டம், தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம், என்.ஆர்.டி.நகர், காந்தி சாலை, என்.ஆர்.டி.மண்டபம் அருகில், தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து இன்று (19.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, தேனி அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் உள்ளே செல்லும் வழி, மற்றும் வெளியேறும் வழிகளையும், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறை, பேருந்து நிலையத்திலிருந்து தினமும் குப்பைகளை அகற்றும் முறைகள் குறித்தும், என்.ஆர்.டி. நகர், காந்தி சாலையில் குடியிருப்பு வாசிகளுக்கு புதியதாக வழங்கப்பட்டு வரும் குடிநீர் இணைப்பு, அதற்காக பொருத்தப்பட்டுள்ள அளவீட்டுக்கருவி, தேனி-அல்லிநகரம் நகராட்சியில் உள்ள பணியாளர்களின் பணித்திறன் குறித்தும், பதிவேடுகளை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையத்தில் பயணிகள் எவ்வித இடையூறுமின்றி பயணத்தை மேற்கொள்ளவும், பேருந்துகள் தங்கு தடையின்றி வந்து செல்லவும், இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. வைகை அணை கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 20,000 இல்லங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டு தற்போது 17,000 இல்லங்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இல்லங்களுக்கு குடிநீர் இணைப்புகள் விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் இல்லங்களில் உருவாகும் குப்பைகளை தரம் பிரித்து நகராட்சி பணியாளர்கள் குப்பை சேகரிக்க வரும் பொழுது வழங்கிட வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், டெங்கு கொசுக்கள் பரவாமல் தடுத்திட தினமும் டிபிசி பணியாளர்கள் வீடு வீடாகச்சென்று தண்ணீர்த்தொட்டிகளில் லார்வா கொசுப்புழு உள்ளதா என கண்டறிந்து மருந்து தெளித்திடவும், வீடுகளில் உள்ள பழைய டயர்கள், கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அதனை அழித்திடவும், வீட்டு உரிமையாளர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், நகராட்சியில் உள்ள அனைத்து சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளை முறையாக தூய்மையாக பராமரித்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 99,414 மக்கள் தொகை உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவர்கள் ஆரோக்கியத்துடனும், சுகாதாரத்துடனும் இருப்பதற்கு நகராட்சிப் பணியாளர்களின் பணி இன்றியமையாததாகும். அதனை கருத்தில் கொண்டு எவ்வித விமர்சனத்திற்கும் ஆளாகாமல் தங்களது பணியின் தன்மை உணர்ந்து பணியாற்றிட நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் திரு.ராஜாராம் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி பொறியாளர் திரு.விவேகானந்தன் அவர்கள், நகராட்சி பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**